உ
சிவமயம்
ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை

# ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயில்
# பாலஸ்தாபன கும்பாபிஷேகம் அறிவிப்பு

**2 ஜூன் 2022**

**அன்புள்ள பக்தர்களுக்கு,**

**வணக்கம். நிகழும் மங்களகரமான சுபகிருது வருடம் வைகாசி மாதம் 20 உ க்கு 3 ஜூன் 2022 வெள்ளிக்கிழமை முதல் வைகாசி மாதம் 26 உக்கு 9 ஜூன் 2022 வியாழக்கிழமை வரை ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயிலின் பாலஸ்தாபன கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கிறது. அதனைத் தொடர்ந்து கோயிலின் திருப்பணி வேலைகளும் ஆரம்பிக்க உள்ளன.**

**பாலஸ்தாபன நிகழ்ச்சிகளின் முதல் நிகழ்ச்சியாக 3 ஜூன் 2022 வெள்ளிக்கிழமை காலை கணபதி ஹோமத்துடன் ஆரம்பிக்க உள்ளது. ஹோமத்தினைத் தொடர்ந்து 9 ஜூன் 2022 வியாழக்கிழமை வரை பாலஸ்தாபன நிகழ்வுகள் மட்டும் அனுசரிக்கப்படும். அனைத்து நிகழ்ச்சிகளின் விபரம் கொண்ட நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

**பாலஸ்தாபன நிகழ்ச்சிகளை முன்னிட்டு 7 ஜூன் 2022 செவ்வாய்க்கிழமையன்று காலை வரை அனைத்து அர்ச்சனைகளும் செய்யப்படும்.**

**பாலஸ்தாபனம் முடிந்து 9 ஜூன் 2022 வியாழக்கிழமை மாலை முதல் பாலஸ்தாபன ஆலயத்தில் பழ அர்ச்சனை மட்டும் வழங்கப்படும்.**

**திருப்பணிகள் முடிவு பெற்று கும்பாபிஷேகத்திற்கு பிறகு நமது ஸ்ரீ தெண்டாயுதபாணி ஆலயத்தில் அனைத்து சேவைகளும் வழங்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**நமது கோயில் திருப்பணிகள் சிறப்புடன் நடைபெற தங்கள் அனைவரின் மேலான ஒத்துழைப்பை வேண்டுகிறோம்.**

**பக்தப் பெருமக்கள் அனைவரும் பாலஸ்தாபன நிகழ்வுகள் அனைத்திலும் கலந்துக் கொண்டு ஸ்ரீ தெண்டாயுதபாணியின் திருவருளை பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

**நன்றி.**

**இப்படிக்கு**
**ஆலய மேலாண்மைக்குழு**
**செட்டியார்கள் கோயில் குழுமம்**